1971 ஜூலை 3]

Workers of Kallakurichi Co-operative Sugar Mills

* 122 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether a number of workers of the Kallakurichi Co-operative Sugar Mills were suspended about January–February–March, 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:

(அ) ஆம்.

(இ) அவர்கள் நெடுநாள் வேலைக்கு வராததாலும் தீய நடத்தைக்காகவும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். வேலை நீக்கம் செய்யப்பட்ட 10 தொழிலாளர்களில் நால்வர் மீண்டும் நியமனம் செய்யப்பட்டனர். விசாரணைக்குப் பிறகு அறுவர் வேலையிலிருந்து விலக்கப்பட்டனர்.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, அவர்கள் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதைஅமைச்சரவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: வேலையிலிருந்து நீக்கப் பட்டதுதான் எடுக்கப்பட்ட நடவடிக்கை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், அவர்கள் விசாரணையின் பொழுது, தாங்கள் நிறுத்தப்பட்டதாகவும், அவர்கள் தாங்களே வேலையிலிருந்து வேலைக்கு வராமல் இருந்தது உண்மை அல்ல என்றும் தெரிவிக்கிறார்களே, அப்படியானால் அந்த ஆறுபேர்களைப் பற்றிப் புனராலோசனை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அந்த 6 பேரும் இது வரையில் எவ்வித அப்பீலும் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

Workers of Khadi Board under suspension

* 123 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether some of the workers of Khadi Board are still under suspension for the strike on 2nd October 1968; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :

(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கிடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், 1968-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ஆம் தேதி அடையாள வேலைநிறுத்தம் செய்ததால் 70 பேர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டதுமல்லாமல்

மவுண்ட் ரோட்டில் இருந்த டெய்லரிங் யூனிட் குளோஸ் செய்யப்பட்டு 22 பேர்களுக்கு வேலையில்லாமல் போனதும், சமீபத்தில் சிலர் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர் என்பதும், அந்த நேரத்தில் சங்கத்தின் காரியதரிசிகளான பெருமாள், வேதமூர்த்தி அவர்களும், ஹைகோர்ட் உத்தரவு பெற்றும்கூட வாசுதேவன் என்பவர் வேலைக்கு எடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இது ஹைகோர்ட்டில் இருந்தது. ஆனால் எல்லோரும் ஹைகோர்ட்டில் வழக்குத் தொடரவில்லை. ஒருசிலர் வழக்குத் தொடர்ந்தார்கள். ஆனால் எல்லோருக்கும் பொதுவான வழக்காயிருந்ததால், சம்பந்தப்பட்ட ஒருவருக்கும் வழக்கு முடியும்மட்டும் ஒன்றும் செய்ய முடியாமலிருந்தது. வேலையும் கொடுக்க முடியவில்லை. அந்த நிலை இருந்தது. ஏப்ரல் மாதம் 24-ம் தேதி, பொதுத்தேர்தல் முடிந்தபிறகு ஹைகோர்ட் தீர்ப்புக் கொடுத்தது. அதன்படி இந்த ஊழியர்கள் தொடர்ந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. தள்ளுபடி செய்தாலும், இந்த அரசு பெருந்தன்மையோடு அவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்திக்கொண்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், பலரும் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது உண்மை. ஆனால்...

MR. SPEAKER: The question is whether they were under suspension.

திரு. கே. டி. கே. தங்கமணி: சங்கத்தின் தலைவரும், காரியதரிசியும் சஸ்பென்ஷனில் இருக்கிறார்கள், அவர்கள் இன்னும் அப்படி இருக்கிறார்களே, அதேபோல ஹைகோர்ட் வேலை கொடுக்க வேண்டுமென்று சொன்ன சேல்ஸ் டெப்போ அசிஸ்டெண்ட் மேனேஜர், அடையாறு, வாசுதேவன் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டாரா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, குறிப்பாக இன்னார் என்று கவனிக்க வேண்டுமென்றால் நான் மீண்டும் பார்க்கத் தயாராகயிருக்கிறேன். ஆனால் கோர்ட்டில் ஊழியர்கள் தொடர்ந்த வழக்கு அவர்களுக்குப் பாதகமாக, டிஸ்மிஸ் செய்யப்பட்டாலும் அவர்கள் அந்த வழக்கைத் தொடர்ந்தார்கள் என்பதுபற்றி எந்தவிதமான பழிவாங்கலும் இல்லாமல், மீண்டும் வேலைக்கு எடுக்கப்பட்டார்கள் என்ற குறிப்புகள்தான் என்னிடம் இருக்கின்றன. குறிப்பாக வாசுதேவன் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் தனியாகக் கவனிக்கலாம்.